# பத்திரிக்கைச் செய்தி

## மின் இணைப்பு வழங்குவதற்காகா ரூ.2,000/- லஞ்சம் கேட்டு பெற்ற கேங்க் மேன் கைது

புகார்தாரர் திரு.அமீர்அலி, அத்திக்கடை, கூத்தாநல்லூர் தாலுகா, திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தனக்கு சொந்தமான வீட்டிற்கு முதல் தளத்திற்கு மின்இணைப்பு வேண்டி கூத்தாநல்லூர் உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். புகார்தாரரின் வீட்டின் முதல் தளத்திற்கு மின் இணைப்பு வழங்க திரு.ஆனந்த், கேங்க் மேன், கூத்தாநல்லூர் உதவி மின் பொறியாளர் அலுவலகம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவாரூர் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 07.12.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஆனந்த், கேங்க் மேன், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.2,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.